பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 11 சனிக்கிழமை 27.07.2024 கதிர் 262

## செப். 21 ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு நேற்று வெளியீடு

2024 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதற்கான வாக்களிப்பு செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுமென தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத் தொகை தொடர்பிலும் தேர்தல்கள் ☞ 8

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட

## ரணில் உள்ளிட்ட 4 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டு ஒரு சில மணித்தியாலத்துக்குள் நான்கு வேட்பாளர்கள் நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு ☞ 2

## பதவியிலிருந்து விலகிப்போகட்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

### நாடாளுமன்றத்தில் சஜித் நேற்றுக் காட்டம்

ஜனாதிபதிவேட்பாளராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவால் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியவில்லைஎன்றால்அவர் ஜனாதிபதிப் பதவியைவிட்டு விலகட்டும். பதில் ஜனாதிபதி ஒருவர் அந்த நியமனத்தைச் செய்துவிட்டுப்போவார்என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெவித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் நாடாளுமன்றில் பிரதமர் ஆற்றிய விசேட உரைக்கு நேற்றுப் பதிலளித்தபோது அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றத்தின் 3 பேர்கொண்ட நீதியரசர்கள் குழு பொலிஸ்மா அதிபர் நியமனம்தொடர்பில் இடைக் காலதடைஉத்தரவொன்றை வழங்கி இருக்கிறது. நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக எடுக்கும் தீர்மானத்தினால் நாங்கள் அனைவரும் அரச அதிகாரிகளும்கூட இதன் சாதக பாதங்களை அனுபவிக்கவேண்டியநிலை ஏற்படும். நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் செயற்பட்டால் பெரும் நெருக்கடிக்குள் விழுவோம். குறிப்பாக அரச அதிகாரிகள் சட்டத்தின் பிரகாரம்செயற்படவேண்டும். அரசியல்வாதிகள்பைத்தியம் விளையாடிவிட்டு செல்வார்கள். அதற்கான பிரதிபலனை அவர்கள் அனுபவிப்பார்கள். ஆனால் அரச அதிகாரிகள் இதில் சிக்கிக்கொள்ள வேண்டாம்.

உயர்நீதிமன்றம்வழங்கி இருக்கும்இடைக்காலத்தடை உத்தரவை ஏற்றுக்கொள்ள முடியாதுஎனஎவ்வாறு ☞ 8

## இது ரகசியம் அல்ல!

குட்டையைக் குழப்பினால் இலகுவாக மீன் பிடிக்கலாம் என்பார்கள். பொலிஸ் மா அதிபர் விவகாரம் முதற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நாட்டை ஏன் குழப்புகின்றார் என்பது அவருக்கே வெளிச்சம்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்கமுடியாது என்று பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் என்பது தெரிந்ததே.

பொலிஸ்மா அதிபருக்கு எதிராக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக் காலத் தடை உத்தரவில் அடிப்படை சட்டவலு கிடையாது என்றும்,ஆகவேஉயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்றார் பிரதமர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக் காலத் தடை உத்தரவை வலுவற்றதாக்க அரசமைப்பு பேரவை தலையிட வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

நடைமுறைச்சட்டஏற்பாடுகளுக்கு அமைய பதில் பொலிஸ்மா ☞ 2

### ஊழல் ஒழிப்பு குறித்து

# ரணில், சஜித், அனுர மூவரும் பகிரங்க விவாதத்திற்கு தயாரா?

### சுமந்திரன், சாணக்கியன் கூட்டாகக் கேள்வி

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தனர்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

எமது நாடு இன்று ஒரு ☞ 2

## விக்கிரமபாகுவின் இறுதிக் கிரியை இன்று

மறைந்த மூத்த இடதுசாரி அரசியல் தலைவரும் புதிய சம சமாஜ கட்சியின் முன்னாள் தலைவருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவின் இறுதிக் கிரியைகள் இன்று பொரளை பொது மயானத்தில் நடைபெறவுள்ளது.

உடல் நலக்குறைவால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை தனது 81ஆவது வயதில் விக்ரமபாகு கருணாரத்ன காலமானார்.

நேற்றுக் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரையும், இன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் அன்னாரின் பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்காக கொழும்பு பொரளையில் அமைந்துள்ள ஏ.எப்.ரேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக புதிய சம சமாஜ கட்சி அறிவித்துள்ளது.

பொரளை மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ள அவரது ☞ 8

## 97 சதவீத கண்ணிவெடிகள் வடக்கு மாகாணத்தில் அகற்றம்

### ஆளுநர் திருமதி சார்ள்ஸ் அறிவிப்பு

வடமாகாணத்தில் 5 மாவட்டங்களிலும்சுமார் 97 சதவீத கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர். திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வடமாகாண ஆளுநர் இதனைத் ☞ 8

## சு.க. இன்னமும் முடிவில்லை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று சுதந்திரக் கட்சி இன்னமும் முடிவு செய்யவில்லை என்று சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தேர்தலில் சுதந்திர கட்சி எவ்வாறு செயற்படப் போகிறது என்பது தொடர்பில் கட்சி தலைமையில் விசேட கலந்துரையாடல் ☞ 8

## பெரமுனவின் 75 எம்.பிக்கள் ரணிலை ஆதரிக்கும் முடிவில்

### கட்சியின் மூத்த உறுப்பின்ர்கள் தெரிவிப்பு

ஶ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் 75 நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர். கட்சியின் பெரும்பான்மையான நிலைப்பாட்டுக்கு ☞ 8

## பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாகவேயில்லை

### சபை முதல்வர் விளக்கமளிப்பு

பொலிஸ் மா அதிபரின் பதவி வெற்றிடமாக வில்லை, அவரது பதவி நிறுத்தப்பட்டே உள்ளது. அப்படியிருக்கும்போது எப்படிப் பதில் பொலிஸ் மா அதிபர் பதவியை நிரப்ப முடியும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தடையுத்தரவு சம்பந்தமாகப் நாடாளுமன்றத்தில் நேற்று தெளிவுபடுத்தும் போதே அவர் ☞ 8

## ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் விசேட கொடுப்பனவு ரூ. 3000

அரச சேவையின் ஓய்வூதியதாரர்களுக்கு விசேடமாதாந்தகொடுப்பனவாக 3,000 ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதாககல்விஅமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை எதிர்வரும் செப்டம்பர் மாதம்முதல்இந்தவிசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ☞ 8

## மோதலை தவிர்ப்பது முக்கியம்

### கரு ஜெயசூரிய தெரிவிப்பு

தேர்தல்காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, நாடாளுமன்றத்துக் கிடையில் மோதல்களைத் தவிர்ப்பதுமுக்கியமானது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவை ஏற்றுக் கொள்ள முடியாது ☞ 8

## பொலிஸ் மா அதிபர் விவகாரத்தில் ஆழச் சிந்தித்தே முடிவெடுத்தோம்

### சபாநாயகர் தன்னிலை விளக்கம்

பொலிஸ் மா அதிபர் விவகாரம் மிகவும் சிக்கலானது. அரசமைப்பின் 41 (ஈ) உறுப்புரைக்கமைய நியாயமான, சரியான தீர்மானத்தை ஆழமாக சிந்தித்துதான் எடுத்தோம் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் பொலிஸ் மா ☞ 8

## பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி முப்படைகளுக்கும் அறிவுறுத்தல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து தேர்தல்கள்ஆணைக்குழு அறிவிப்பை வெளியிட்டிருக்கும் நிலையில் இந்தக் காலப் பகுதியில் ஜனாதிபதிவேட்பாளர்கள், பொதுமக்கள்மற்றும்முழு நாட்டினதும்பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரமித்த பண்டாரதென்னக்கோன் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு படைகளின் பிரதானிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழு நேற்று முற்பகல் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே இராஜாங்க அமைச்சர் இந்த ☞ 8

## இனி இது .....

அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது, நாட்டில் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறி விக்கப்பட்டுள்ள நிலையில், ரணில்விக்கிரமசிங்கவேட்பாளராகக் களமிறங்குவாரெனில் அரசமைப்புக்கமைய அவரால் பதில்பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.

நீதித்துறையைமலினப்படுத்தும் விதத்தில் அமைந்த பிரதமரின் இந்தக் கூற்று நாடாளுமன்றத்திற்கு வெளியே சொல்லப்பட்டிருந்தால் அது நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகி தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கியிருக்கும். நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் அந்த வாய்ப்பு இல்லை என்றாலும், பொலிஸ் மா அதிபரின் பதவி தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவைப் புறக்கணித்தவர்களுக்கு எதிராக கடுமையானசட்டநடவடிக்கைகளை எடுக்க சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிடுகின்றது என்று தெரிகின்றது.

இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாகக் கட்சியிலுள்ள மூத்த சட்டத்தரணிகளுடன் சஜித் பிரேமதாஸ நேற்று உடனடியாகவே ஆலோசனை கலந்துள்ளார். பிரதமரின் அறிவிப்பு வெளியான கையோடு அதனைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தி மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தத் தவறுவோருக்குஎதிராக மட்டுமன்றி, நீதிமன்றத் தீர்ப்பைத் தவறாக வியாக்கியானம் செய்பவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அந்தக் கூட்டத்தில் சட்டத்தரணிகளால் சஜித்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆக, மொத்தத்தில் இந்தப் பிரச்சினை சட்டச் சிக்கலாக, சட்டப் போராட்டமாகத் தொடர்ந்து நீடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் இதுபோன்ற விடயங்கள் நாட்டை குழம்பிய குட்டையாக்கி வைத்திருக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமானகட்டத்தில்இருக்கின்றது. சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் இது ஒரு முக்கியப்புள்ளி ஆகும். நாம் பொருளாதாரத்தில் தன்நிறைவாக இருந்தோடு, மற்றவர்கள் பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரியாகவும் இருந்தோம்; சிங்கப்பூரின் லீகுவான்யூவுக்கும்கூட நாம் ஒரு மாதிரியாககாணப்பட்டோம்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில், உயர்கல்விவரையிலான இலவசக் கல்வியையும், அனைத்து குடிமக்களுக்கும் இலவச சுகாதார சேவைகளையும்வழங்கக்கூடிய ஒரு நிலையில் இருந்தோம். இத்தகைய உயர்ந்த, ஆரோக்கியமான நிலையில் இருந்து, நாங்கள் கடன் பாதாளத்துக்குள்வீழ்ந்து, உத்தியோக பூர்வமாக 'வங்குரோத்து நாடு' எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மூன்று தசாப்தங்களாக உள்நாட்டுப் போரிற்கு முகம்கொடுத்த நாம், அதன் பின் விளைவுகளிலிருந்து மீண்டெழுந்து அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை அடைவதற்கு இன்னமும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். உலகத்தில் மிக மோசமான ஊழல் நிறைந்த நாடாக நாம் காணபப்டுகின்றோம். இதனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டு குடிமக்கள் கிளர்ச்சி செய்து வீதியில் இறங்கினர். அவர்கள் ஒட்டுமொத்த அமைப்பு முறை மாற்றத்திற்கு அழைப்பு விடுத்ததோடு ஒப்பீட்டளவில் வன்முறை இல்லாமல் கற்பனை செய்ய முடியாத அளவிலான மாற்றங்களைக் கொண்டு வந்தனர். நாட்டின் நிதியமைச்சரும் பிரதமரும் இராஜினாமா செய்ய வேண்டியிருந்ததுடன் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மக்களின் பாரிய விருப்பு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறி அதனைத்தொடர்ந்து அவர் இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த மாற்றங்கள் வழமையான தேர்தல் முறைகள் மூலமாக அல்லாமல், மக்கள் எழுச்சியால் கொண்டுவரப்பட்டது. அதற்கு பின்பு குடிமக்கள் வாக்களிப்பதன் மூலம் ஜனநாயக ரீதியில் தங்களை வெளிப்படுத்தும் வாய்ப்பை இப்பொழுது தான் பெறுகின்றனர்.

இந்த முக்கியமான தீர்மானமிக்க தருணத்தில், நாடு திரும்பவும் அமைதியையும் சுபீட்சத்தையும் அடைய வேண்டுமானால், தீவிரமாகத் தீர்க்கப்பட வேண்டிய சில முக்கியமான பிரச்சினைகளை மக்கள் முன் வைப்பது அவசியம் என்று நாங்கள் நினைத்தோம். நாங்கள் நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக அல்லது முழுமையான அளவில் வாழும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து வரும், இந்த நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவோம்.

ஒரு காலத்தில் தனிநாடு அமைத்து சுதந்திரமாக வாழ விரும்பிய, சமமான குடியுரிமை அந்தஸ்தை அடைய இன்னுமும் போராடிக்கொண்டிருக்கும் மக்களை நாங்கள் பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் போன்ற ஏனைய தமிழ் பேசும் சமூகங்களும் பெரும்பான்மைவாதத்தின் நுகத்தடியின் கீழ் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றன. கோவிட் 19 பெருந்தொற்றுப் பரவலின்போது நியாயமற்றமுறையில் முஸ்லிம்களின் உடல்கள் பலவந்தமாக தகனம் செய்யப்பட்ட விவகாரம் மற்றும் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது, அவர்களுக்கான அடிப்படை சம்பளம் என்பன அவர்களுக்கு எதிரான வரலாற்று அநீதிகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும். இந்த பேரினவாத போக்குகள் நாட்டின் பெண்களையும் கணிசமான வழிகளில் பாதித்துள்ளன, இது அவர்கள் வாக்களிக்கும் மக்கள் தொகையில் 52% ஆக இருந்தபோதிலும் அவர்கள் கொண்டிருக்கும் மோசமான பிரதிநிதித்துவத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதி முறைகேடு, ஊழல் மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாகவே ஆரம்பத்தில் நாடு கடனை மீள செலுத்த இயலாத நிலையினை அடைந்தது. நாம் வீழ்ந்துள்ள இவ் ஆழத்திலிருந்து மீள, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கோரப்பட்டது. ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதற்கும் நாட்டின் கடன் மீள அளிக்க முடியாத நிலையை அறிவிப்பதற்கும் நீண்ட நாட்களுக்கு முன்பே, நாணய நிதியத்திற்குச' செல்லுமாறு ஆளும் தரப்பிடம் வலியுறுத்தினோம். நமது சமூகங்களின் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் பிரிவினரின் பாதுகாப்பில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தோம்.

நாணய நிதிய பொருளாதார சீர்திருத்தத்திற்கான ஒரு பெரிய சவாலாக 'ஊழல் பாதிப்புகளை' அடையாளம் கண்டுள்ளது மேலும் அதைத் தொடர்ந்து 'ஆட்சிமுறையினைபரிசோதித்தல்', கட்டமைப்பில் உள்ளமற்றொருபெரியபலவீனத்தை சமிக்ஞை செய்ததுள்ளது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் சரியாகக் கையாளப்படாததால், இந்தத் திட்டத்தின் மூலம் நம் நாட்டில் ஏழைகள்மிகமோசமாகப்பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் தொகை 2019 இல் 14% ஆக காணப்பட்டுதற்போது அது 30% ஆக உயர்ந்துள்ளது; மேலான வாழ்க்கை ஒன்றிற்கான எதிர்பார்ப்புடன் நாட்டைவிட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் செயல்படுத்தும் திறன் கொண்டவர்கள் மற்றும் ஏழைகளும் பிழைப்புநோக்கங்களுக்காகநாட்டை விட்டு வெளியேறும் ஒரு பெரிய மூளைசாலிகளின் வெளியேற்றம் உள்ளது.

ஆளும்தரப்புஉள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டது, இது பிரத்தியேகமாக – இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் அற்ப சேமிப்பாகிய ஊழியர் சேமலாப வைப்பு நிதியில் இருந்தே பெறப்பட்டது. மறைமுக வரிகள் ஏழைகள் மீது பெரும் சுமையை சுமத்தியுள்ள அதே நேரத்தில் பல பணக்காரர்களும் சக்திவாய்ந்த ஆளுமைகளும் தண்டனையின்றி வரி செலுத்துவதைத் தொடர்ந்து ஏய்த்து வருகின்றனர். தொழிலதிபர் தம்மிக்க பெரேரா சடுதியாக ரூ. 1.15 பில்லியனினை நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு சற்று முன்பு வரியாக செலுத்தியது கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும். வழக்குத் தொடரப்படுவதைத் தவிர்ப்பதற்காக இலஞ்சம் கொடுத்து வரும் பலரிடம் இருந்து நேரடி வரி வசூலிக்க அரசு எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. புகையிலை மற்றும் மதுபானம் மீதான வரி போன்ற எளிய தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதிலிருந்து அரசாங்கத்தின் வரிக் கொள்கை திசைதிருப்பப்பட்டுள்ளது, என்பதை காட்டுகின்றது, இது அதிக ஊழலின் காரணமாக இருக்கலாம்.

இந்தப்பின்னணியில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஏனைய தேர்தல்களில் உயர் பதவிகளைப் பெறுவதற்குப் பலர் ஆசைப்படுகின்றனர். அவர்கள் அனைவரிடமும் வாக்குறுதிகளை நாம் கேட்டுள்ளோம். நாங்கள் சந்திரனில் இருந்து அரிசி கொண்டுவருவோம் என்றும் 1994 இல் 6 மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்றும் வாக்குறுதியளிக்கப்பட்ட மக்கள் ஆவோம். வேட்பாளர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றும் எண்ணம் இல்லாமல் வெறுக்கத்தக்கவகையில் அவற்றை வழங்குவதற்கு மாத்திரம் பழகிவிட்டனர். தற்போது மூன்று முக்கிய வேட்பாளர்கள் ஊழலை தீர்க்கமாக கையாள்வார்கள் என்று வாக்காளர்களை நம்ப வைக்க முயற்சிக்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊழலுக்கு எதிராக வினைத்திறனான சட்டம் ஒன்றினை நிறைவேற்றியதாக பெருமையாகச் சொல்கின்றார். அப்படியொரு சட்டம் நிறைவேற்றப்பட்டு நமது சட்டப் புத்தகங்களில் உள்ளது என்பது உண்மைதான். ஆனால் அது அங்கே மாத்திரமே காணப்படும்! கண்துடைப்பாக கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு சட்டநடவடிக்கை எடுத்ததைத் தவிர, அறியப்பட்ட எந்தவொரு ஊழல் நடவடிக்கைகளுக்கும் எதிராக ஒரு வழக்கும் இன்னமும் தொடரப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் வைத்திருக்கும் அரசியல் கட்சியானது, நாட்டின் மிகப் பெரிய மோசடியாளர்களை உள்ளடக்கியதாக அறியப்படுகிறது. அதனால்தான் அவர்கள் மக்களால் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இன்னும் அவர்களில் யாரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஜனாதிபதி பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஊழலுக்கு எதிராக ஒரு விரலைக் கூட உயர்த்துவார் என்பதை இதுவும் அவரது நீண்ட கால சாதனைகளும் நாட்டுக்கு தெரிவிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பழைய ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பகுதியானோரை அவரது கட்சிக்குள் கொண்டவர். அவர்களில் பலர் அனுபவமிக்க அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஊழலுக்கும் பெயர் பெற்றவர்கள். சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நலன்களுக்கு முரண்படாமல் ஒரு சுதந்திரமான அரசு வழக்கறிஞர் அலுவலகத்தை அமைப்பதாக அவர் உறுதியளித்திருந்தாலும், மக்கள் அவரது வாக்குறுதிகளை தீவிரமாக எடுத்துக் கொள்ள முடியுமா? தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பல அரசியல்வாதிகளின் ஊழல் ஒப்பந்தங்கள் பற்றிய பல கோப்புகள் எனக் கூறப்பட்ட கோப்புக்களை அண்மைய காலங்களில் நாட்டுக்குக் காட்டினார். எனினும் அந்த கோப்புகள் என்ன என்பதை அவர் இன்றுவரை நாட்டுக்கு தெரிவிக்கவில்லை. அவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் ஊழல் ஒழிந்துவிடும் என்று நாடு நம்ப முடியுமா?

ஊழலை ஒழிப்பதாக அவர்கள் அளித்த வாக்குறுதிகளில் இந்த நபர்கள் தீவிரமாக இருந்தால், பொது வெளியில் இந்த பிரச்சினைகள் குறித்து கடுமையான கேள்விகளை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருப்பார்களா? இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கவும், வாக்காளர்களை தெளிவுபடுத்தவும் அவர்களுக்குவாய்ப்புஅளிக்கப்படும் பொது நிகழ்ச்சி ஒன்றினை நடத்த நாங்கள் தயாராக உள்ளோம். அத்தகைய மன்றத்தில் பங்கேற்க தங்கள் விருப்பத்தை பகிரங்கமாக அறிவிக்குமாறு அனைத்து தீவிர ஜனாதிபதி தேர்தலின் போட்டியாளர்களையும் நாம் அழைத்து நிற்கின்றோம். தொடர்ந்து அவர்கள் பொருளாதாரத்தை எவ்வாறு கையாள்வார்கள் என்பது தொடர்பான கேள்விகளை அவர்களிடம் இருந்து தெளிவுபடுத்தவும்; ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் நலனுக்காக ஐஆகு மற்றும் மற்றவர்களுடன் எப்படி அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்; நாட்டிற்கு மிகப் பெரிய வருமானம் ஈட்டுபவர்கள் – பெருந்தோட்டங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் வெளிநாட்டில் பணிப்பெண்களாக பணிபுரியும் பெண்கள் – எப்படி அதிகாரமளிக்கப்படுவார்கள் மற்றும் முடிவெடுப்பதிலும் நிர்வாகத்திலும் அவர்களுக்கு உரிய இடத்தை வழங்குவார்கள் போன்றவற்றுக்குவிடைகாண அந்த மன்றத்தைப் பயன்படுத்தலாம். அவர்கள் ஆளுகை தொடர்பான கேள்விகளுக்கும் பதிலளிக்கலாம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை – அவர்கள் மூவரும் பல்வேறு காலகட்டங்களில் அதை ஒழிப்பதாக உறுதியளித்தனர் மற்றும் சுதந்திரத்திற்குப் பிறகு நாடு எதிர்கொண்டுள்ள மிகவும் சிக்கலான பிரச்சினைக்கு பல்வேறு உள்ளாட்சிகள் மற்றும் மாகாணங்களின் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வினை வழங்குவதன் மூலம் தீர்வு காண்பதற்கும் உண்மையான குடியரசாக மாறுவதற்குமான கேள்விகளுக்கு அவர்கள் பதில் வழங்க வேண்டும்.

# அழுத்தத்துக்கு அடபணியாது தேர்தல்கள் ஆணைக்குழு

## அதன் தலைவர் தெரிவிப்பு

பிறதரப்பினரது அழுத்தங்களுக்கு தலைகுனிய போவதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். இதற்கமைய எதிர்வரும் செப்டெம்பர் 21 வாக்கெடுப்பை நடத்துவதற்கும், ஒகஸ்ட் 15 வேட்பு மனுக்களை பொறுப்பேற்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியிடும் வேட்பாளர்கள் வெள்ளிக்கிழமை (26) எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதி அதிகாரியிடம் கட்டுப்பணத்தை செலுத்த முடியும்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை ஏன் விரைவாக வெளியிடவில்லை. என்று பலர் கடந்த காலங்களில் கேள்வியெழுப்பினார்கள். தற்போது அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். அனைவருக்கும் சாதகமான வகையில் சனிக்கிழமையன்று வாக்கெடுப்பை நடத்த தீர்மானித்துள்ளோம். சனிக் கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். முன்வைக்கப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களுக்கும் வர்த்தமானி ஊடாக பதிலளித்துள்ளோம்.

அரசமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் 1981 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் என்பனவற்றுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். இதனை தவிர்த்து பிற தரப்பினரது அழுத்தங்களுக்கு தலைகுனிய போவதில்லை. தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் வெள்ளிக்கிழமை செயற்படுத்தப்படும். தேர்தல் சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளில் எவரும் ஈடுபட முடியாது. தேர்தல் தொடர்பான செயற்திட்டங்கள் மற்றும் சட்ட வழிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வெகுவிரைவில் வெளியிடுவோம்.

ஜனாதிபதித் தேர்தல் பணிகளை அரசஅச்சகத்திணைக்களமும், தபால் திணைக்களமும் வெள்ளிக்கிழமை (26) முதல் ஆரம்பித்துள்ளன. தேர்தல் பணிகளுக்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறார். தேர்தல் நடவடிக்கைகளுக்குஎவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

## கட்டுப்பணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக போட்டியிட முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். ஜனாதிபதி சட்டத்தரணி ரொனெல் பெரேரா இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்கீர்த்திரத்ன சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதற்கு இன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். இவர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் சுயாதீன வேட்பாளராக போட்டியிட்டார்.

அனினவ நிவஹால் பெரமுன என்ற கட்சி சார்பில் போட்டியிடுவற்கு ஓசல லக்மால் அனில் ஹேரத்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# திருமலை இலந்தைக்குளம் பகுதியில் விகாரை அமைக்கக் காணி துப்புரவு

## இரவோடு இரவாக வேலைத்திட்டம்







திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் பகுதியில் இரவோடு இரவாக பௌத்த விகாரை அமைப்பதற்காக காணி துப்பரவு செய்யப்பட்டதால் அப்பகுதியில் பதட்டம் நிலவி வருகின்றது.

குச்சவெளி - இலந்தைக்குளம் 5 ஆம் கட்டைப்பகுதியில் வியாழக்கிழமை இரவில் இருந்து பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் பௌத்த விகாரை அமைப்பதற்காக மக்களுடைய காணி துப்பரவு செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வயலுக்கு சென்ற மக்களால் குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை அவதானிக்கப்பட்டு மக்களுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, இன்று வெள்ளிக்கிழமை (26) குச்சவெளி பிரதேச செயலாளரின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலந்தைக்குளம் பகுதியில் காலாகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் யுத்தத்தின் காரணமாக 1990ஆம் ஆண்டு மற்றும் அதனை அண்டிய காலப்பகுதிகளில் இடம்பெயர்ந்திருந்ததாகவும், அப்பகுதியில் மீள குடியமர்வதற்கான கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நீண்டகாலமாக முன்வைத்துவருவதாகவும் இந்நிலையில் தற்போது அப்பகுதி ஆக்கிரமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

குறித்த பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான பிறப்பு அத்தாட்சி பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம், காணி ஆவணங்கள் உட்பட உடைந்த பாடசாலைக் கட்டடம் மற்றும் அரச கட்டடங்களும் இன்னும் ஆதாரங்களாக காணப்படுவதாகவும், வயல் வரம்புகளும் இன்னும் அழியாமல் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்வெட்டிக்காக பிடிக்கம்பு வெட்டினாலே கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கும் அரச திணைக்களங்கள் பாரிய இயந்திரங்களினாலும், இயந்திர கை வாள்களினாலும் பாரிய பச்சை மரங்களை வெட்டி அழிப்பதற்கு எதிராக ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.(05)

# திருக்கோவிலில் வெள்ளி திருவிழா



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி சித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



நேற்று வெள்ளிக்கிழமை கரவாகுப்பற்று மக்களின் பூஜை ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை பகல் திரு விழாவின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டார்கள் .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் சாமி குருக்கள் ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதர் குருக்கள் முன்னி லையில் ஆலய வண்ணக்கர் வ.ஜயந்தன் சகிதம் மேளதாளத்தோடு மிகவும் சிறப்பாக இந்தத் திருவிழா நடைபெற்றது.(05)



# பொதுத்துறை அதிகாரிகள் 15 பேருக்கு மனிதவள மேம்பாட்டு உதவித்தொகை

## ஜப்பானிய புலமைப்பரிசிலில்



இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி H. E. MIZUKOSHI Hideaki, மனிதவள மேம்பாட்டு உதவித்தொகைக்கான ஜப்பானிய புலமைப்பரிசில் திட்டத்தின் JDS (the Japanese Grant Aid for Human Resources Development Scholarship) புலமைப்பரிசில் பெறுபவர்களை வழியனுப்புவதற்கான வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தி அடுத்த மாதம் மாணவர்களாக ஜப்பானுக்குச் செல்லும் அவர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இம்மாதத் தொடக்கத்தில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தபோது எமது வெளிவிவகார அமைச்சருடன் இந்த ஜேடிஎஸ் திட்டத்தில் குறிப்புகள் பரிமாற்றத்தில் கையெழுத்திட்ட வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இநிகழ்வில் விருந்தினராக பங்கேற்றார்

இந்த திட்டம் ஜப்பானில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பொதுத்துறையில் இளம் நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதோடு, அந்தந்த துறைகளில் எதிர்கால தலைவர்களாக தகுதிபெறும்வகையில் அவர்களின் அறிவையும் திறமையையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 15 பொதுத் துறை அதிகாரிகள் 2 ஆண்டுகள் முதுகலை அல்லது முனைவர் பட்டம் பெற அனுப்பப்படுவார்கள். அவர்களின் ஆய்வு கற்கைகள் பொதுக் கொள்கை, நுண்பொருளியல், பொது நிதி மற்றும் முதலீட்டு மேலாண்மை, தொழில் வளர்ச்சிக் கொள்கை மற்றும் முதலீட்டு



ஊக்குவிப்பு மற்றும் நகர்ப்புற மற்றும் பிராந்திய மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

2010 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டது முதல், இதுவரையில் இலங்கையின் 222 பொது அதிகாரிகளுக்கு ஆதரவளித்துள்ளது. தனிநபர்களின் திறன்களை கட்டியெழுப்புவதற்கு மாத்திரம் இந்தத் திட்டம் பங்களிப்பு வழங்குவது மாத்திரமன்றி, இலங்கையின் பொதுத்துறையின் நிறுவனசார் திறன்களை மேம்படுத்துவதற்கும் பங்களிப்பு வழங்கும்.

மூம்றீ அங்கத்தவர்கள் ஜப்பானுடன் பரஸ்பர உறவுகளை கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இரு நாடுகளுக்குமிடையே உறவுப் பாலமாக அமைந்திருப்பதற்கும், ஜப்பானில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகளினூடாக மனித வலையமைப்பு மேம்பாட்டையும் எய்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இலங்கைஅரசாங்கத்தின்கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பல்வேறு சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதற்கும் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் முழு அளவிலான பொருளாதார வளர்ச்சியை நோக்கி இலங்கையின் நிர்வாகத்தை வழிநடத்துவதில் 15 புதிய ஜேடிஎஸ் புலமைப்பரிசில் பெறுபவர்கள் இன்றியமையாத பங்கைவகிப்பார்கள் என்று தூதுவர் மிசுகோஷி தனது உண்மையான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

எதிர்காலத்தில் நமது பிரகாசமான மற்றும் வளமான இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நீண்டகால தலைவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் ஜப்பான் மற்றும் ஜப்பானிய மக்களுடன் தீவிரமாக தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் ஊக்குவித்தார்.

நமது வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான குறிப்புப் பரிமாற்றத்தில் சமீபத்தில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, ஜே.டி.எஸ்க்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் புதுப்பித்துள்ளோம், மேலும் அது நமது இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் மற்றும் வலுப்படுத்தும் என்று நம்புகிறோம (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதித்துறையுடனான மோதலை உடனடியாக நிறுத்தவேண்டும்

அண்மைக் காலமாகவே நீதித்துறையுடன் முரண்படும் போக்கை நிறைவேற்றுத்துறையும் சட்டவாக்கல்துறையும் தீவிரப்படுத்தி வருகின்றன. குறிப்பாக அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றத்தைத் தொடர்ந்து இந்தப் போக்கு மேலும் தீவிரமாகி இருக்கின்றது. அதன் கடைசி நிகழ்வாக, காவல் மா அதிபர் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தலைமை அமைச்சர் (பிரதமர்) தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். மக்களாட்சியின் முக்கிய மூன்று தூண்களில் ஒன்றான நீதித்துறையை இப்படி உதாசீனப்படுத்தி கருத்து வெளியிட்டிருப்பது வருத்தப்படத்தக்கது. ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

நல்லாட்சி என்கிற பெயரில் 2015இல் அதிகாரத்தைப் பிடித்த மைத்திரி – ரணில் கூட்டின் தேனிலவுக் காலம் முடிந்து ரணிலுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன இயங்கியபோதெல்லாம், குறிப்பாக ரணிலை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக மகிந்தவை தலைமை அமைச்சராக நியமித்தபோதெல்லாம் நீதிமன்றத்தில் ஓடிப்போய் நின்று நியாயம் பெற்றபோது இனிப்பாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இப்போது உயர் நீதிமன்றம் தனது நிறைவேற்று அதிகாரத்திற்கு தடைக்கற்களைப் போடும் விதத்தில் வழங்கும் தீர்ப்புக்களை ஏற்க முடியவில்லை.

அதிகாரத்திற்கு வரும் வரைக்கும் அதிகாரத்திற்கு எதிராக நீதித்துறையைப் பயன்படுத்தியவரான ரணில் விக்கிரமசிங்க, அதிகாரத்திற்கு வந்ததும் அதே நீதித்துறை அமைதியாக, தனது அதிகாரங்களைச் சவாலுக்குட்படுத்தாத பூனைக்குட்டியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது விநோதமானது. கண்டனத்திற்குரியது. மக்களாட்சி செழித்தோங்கும் ஒரு நாட்டில் நீதித்துறை சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இயங்குவது மிக முக்கியமானது. அதுவும் ஒரு தனிநபரிடம் அதிகாரங்கள் அனைத்தும் குவிந்து கிடக்கும் இலங்கை போன்ற நாடுகளில் நீதித்துறை தனது முழு சுதந்திரத்துடன் செயற்படவேண்டியது மிக மிக அவசியம். இல்லையேல் அது சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை இழுத்துச் சென்றுவிடும்.

அத்தகையதொரு நிலையில் தற்போதைய ஆளும் தரப்பு நீதித்துறையுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பது ஏற்புடையதல்ல. அது உடனடியாக நிறுத்தப்படவேண்டியதுமாகும். நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை ஏற்கமுடியவில்லை என்றால் அதற்கெதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்கிற நிலையிருக்கும்போது நீதிமன்றத் தீர்ப்புக்களை ஏற்கமுடியாது என்று தவறான முன்னுதாரங்களை ஏற்படுத்துவதை ஆளும் தரப்பினர் கைவிடவேண்டும். நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தாமல் இருக்கமுடியாது என்கிற உண்மை அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்திருக்கும்போதும், நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்திக்கொண்டு நீதித்துறையை மலினப்படுத்தும் விதத்தில் நடந்துகொள்வதை ஆளும் தரப்பினர் உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்.



# முதுமையைப் போற்றுவோம்

**என். பத்ரி**

வாழ்க்கையில் வாலிபப் பருவத்தில் திருமணமாகி நமக்கென ஒரு குடும்பம் அமைகிறது. அதனால் பொறுப்புகளும் கூடுகின்றன. நம்மைப் பெற்றவர்களையும் நாம் பெற்றெடுக்கும் குழந்தைகளையும் நம்மையும் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு வந்து சேருகின்றது.

கூட்டுக் குடும்ப முறை சிதைந்து போனது, கணவன், மனைவி இருவரும் குடும்பப் பொருளாதார நிலையை மேம்படுத்தப் பணிக்குச் செல்வது போன்ற சமூக-வாழ்க்கைமுறை மாற்றங்களால் முதியோர் இல்லங்கள் சமூகத்தின் தவிர்க்க முடியாத அங்கங்களாகிவிட்டது.

நம் கண் முன்னே நம் மழலைகளையும் நம் பெற்றோர்களான முதியவர்களாகிய மழலைகளையும் பராமரிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் பொதுவாக கிடைப்பதில்லை. இந்தக் காலகட்டத்தில்தான் வாழ்க்கை தன் புதிர்களை அவிழ்த்துவிடுகிறது. இரண்டு வேறுபட்ட இயல்புகள் கொண்ட தலைமுறைகளின் நடுவில் வாழும் நிலை நமக்கு ஏற்படுகிறது. இவர்களுக்கு இடையேதான் எவ்வளவு வேறுபாடுகள்!

இவர்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கடினமான கடமையை நாம் சிறப்பாக ஆற்ற வேண்டியுள்ளது. காலம்தான் நமக்கு அதை அனுபவம் என்ற பெயரில் கற்றுத் தருகிறது. ஒவ்வொரு குடும்பச் சூழலுக்கும் ஏற்பச் சிலருக்கு இவ்வனுபவங்கள் வரமாகவோ, சாபமாகவோ அமைகின்றன.

அடம் பிடிக்கும் குணம் அப்பாவுக்கும் இருக்கும், அன்பு மகனுக்கும் இருக்கும். சமன் செய்து வாழ்க்கையை கொண்டு செலுத்துவது சவாலான செயல்தான். மகனுடன் மல்லுக்கு நிற்கும் அப்பா பேரனின் பேச்சை, அப்படியே கேட்டு நடப்பது சற்று விசித்திரமாகத் தோன்றலாம். இதுதான் மனிதத்தில் பாசம் செய்யும் மாயாஜாலம்.

முதியோர்கள் உடல்நிலை நல்ல நிலையில் இருக்கும்போதே தினமும் காலையிலோ, மாலையிலோ சூரிய ஒளியில் 45 நிமிடம் நடைப்பயிற்சி பழக வேண்டும். இதனால் ஏற்படும் நற்பலன்கள் பல. நடைப்பயிற்சி செல்லும் முதியோர்கள் கூடியவரை குழுவாகச் செல்வது நல்லது. சிறிய தூரத்து நடைகூட ஆரோக்கியத்தில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். இது முதுமையிலும் இளமையை நீட்டித்து இருக்க உதவும்.



உடல் செயல்பாடுகளுக்கென முதியவர்கள் நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கவேண்டும். வழக்கமான உடல் செயல்பாடுகள் மூட்டுகள், தசைகள், எலும்புகள், தசைநார்கள் ஆகியன நெகிழ்வாக இருக்க உதவுகின்றன. நமது நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துகின்றன. இது நமது எலும்புகளை வலுப்படுத்தவும், வீக்கத்தைக் குறைக்கவும், நமது ஆற்றல் அளவை அதிகரிக்கவும், நமது சமநிலையை மேம்படுத்தவும் உதவுகிறது. முதியோரின் உளவியல் நலனிலும் நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சுறுசுறுப்பாக இருப்பதன் மூலம், வயதானவர்களால் தனிமை, மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் ஆகியவற்றை வெற்றிகரமாக சமாளிக்க முடிகிறது. நீரிழிவு, இதய நோய், பக்கவாதம், உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களின் அபாயத்தைக் குறைக்கவும் உதவுகிறது. மலச்சிக்கல் பிரச்சினையைத் தவிர்க்க நார்ச்சத்து நிறைந்த உணவுகளை அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். கோப்பி பருகுபவர்களின் சருமம் விரைவிலேயே முதுமை அடைகிறது. அத்துடன் நீர்ச்சத்து குறையும்போது சருமம் இன்னும் உலர்ந்துவிடும். அதனால் தினமும் கணிசமான அளவு நீர் பருகவேண்டும். பழங்கள், காய்கறிகள், கடல் உணவுகளை அதிகம் உண்ணலாம்.

முதுமையில் தூக்கம் சற்றுக் குறைவது உண்மையே. தூக்கத்தின் அளவு ஒவ்வொரு மனிதனுக்கும் மாறுபட்டு இருக்கும். முதுமையில் சுமார் 6 மணி நேரம் முதல் 8 மணி நேரத் தூக்கமே போதுமானது. தூக்கத்தின் மொத்த நேரத்தைவிட, ஆழ்ந்த, தொடர் தூக்கம்தான் மிகவும் முக்கியம்.

முதுமையில் தனிமை கொடுமையானதாக இருக்கும். வேண்டாத நினைவுகள் அவர்கள் மனதில் வந்து அவ்வப்போது நிழலாடும். அதுவும் இணையரில் ஒருவர் இறந்துபோனால் அவர்களின் நிலைமையே வேறு. முதியோரை ஊக்கப்படுத்தும் விதமாக தன்னம்பிக்கையான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். உறவுகள் அவர்களுடன் முடியும் போதெல்லாம் கலந்துரையாடுவது நல்லது.

நமது உடல் நலமும் மனநலமும் ஒன்றுடன் ஒன்று நேரடித் தொடர்பு கொண்டவை. ஏதோ ஒரு நாளில் சோகம் என்னும் புள்ளியில் உருவாகும் சிறு மனக்கவலை முதியோர்க்கு மனஅழுத்தமாக மாறிவிடலாம். மனஅழுத்தம், கவலைகள், முதுமையில் ஏற்படும் பதற்றத்தின் விளைவாக அவர்களின் செரிமான மண்டலத்திலும், கல்லீரலிலும் பாதிப்பு, நெஞ்சில் எரிச்சல், கைகால் வலி, உடல் பலவீனம், மூச்சுக்கோளாறு, தொடர்ச்சியான இருமல் போன்றவை ஏற்படலாம்.

மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது முழு உடல் பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது. ஒரே மருத்துவரின் ஆலோசனையின் கீழ் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது நல்லது. தேவைக்கேற்ப நோயாளி எடுத்துக்கொள்ளும் மருந்துகளையும், அவற்றின் அளவுகளையும் அவர் மாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

முதியோருக்குச் சுதந்திரம் கொடுப்பது, அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் பங்களிப்பை எல்லா விஷயங்களிலும் பெறுவது, மதிப்பது ஆகியவை முக்கியம். அவர்களின் அனுபவங்கள் அடுத்த தலைமுறைக்கு நல்ல வழிகாட்டுதல்களாக அமையும். ஓரளவு பொருளாதார தற்சாற்பு, போதுமான சத்தான உணவு, ஆழ்ந்த தூக்கம், உடற்பயிற்சி போன்றவைதான் முதுமையில் ஒரு மனிதனுக்குத் தேவை. இவற்றைக் கொஞ்சம் பாசத்துடன் பெற்ற மகனோ, மகளோ அளிக்கும்போது முதியோர் அடையும் மகிழ்வுக்கு எல்லையே இருப்பதில்லை.

வாழ்நாள் முழுவதும் நமக்காகவே வாழ்ந்த அவர்கள் வாழப்போவது இன்னும் சில காலமே. அதுவரை அவர்கள் நலனுக்கு முன்னுரிமை கொடுப்போம். அவர்களுடன் நாமும் சேர்ந்து மகிழ்வோமே!

# தொடருந்துடன் மோதிய இளைஞன் உயிரிழப்பு

தெமோதர, கவரவெல பகுதியில் ரயிலுடன் மோதி இளைஞன் ஒருவர் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை உயிரிழந்துள்ளார்எனஎல்லபொலிஸார் தெரிவித்தனர்.

தெமோதர, ரபர்வத்த, கவரவெல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இரவு நேர அஞ்சல் ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் அதே ரயிலில் ஹாலி எல புகையிரத நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு பதுளை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# மொனராகலையில் விபத்து ; ஒருவர் பலி; இருவர் காயம்



மொனராகலை - படல்கும்புர வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

டிப்பர் வாகனமொன்று ஓட்டோ ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்ஹிடா பின்புறத்தில் பயணித்த பெண்ணொருவர்உயிரிழந்துள்ளதுடன், ஓடடோ சாரதியும் டிப்பர் வாகனத்தின் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர்.

41வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள்,மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)




# கல்முனை வைத்தியசாலையில் என்பு முறிவு நெரிவு பிரிவு புரட்சி



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் என்பு முறிவு நெரிவு பிரிவு கடந்த காலங்களை விட மிகவும் சிறப்பாக பல வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

'சி' ஆம் என்று சொல்லப்படுகிற நவீன ரக எக்ஸ் கதிர் கருவியுடன் சிறப்பாக சத்திர சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரபல என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் பததிநாதன் கலாவேந்தன் தலைமையிலான குழுவினர் வார்டில் இயங்கி வருகின்றார்கள்.

அங்கு ஆண்கள் பெண்களுக்கு என்று தனியான சத்திர சிகிச்சை கூடம் 24 மணிநேரமும் தயார் நிலையில் இருக்கின்றது.

கூடவே அம்பாறை மாவட்டத்தில் எங்குமில்லாத சிற்றி நவீன எக்ஸ் கதிர் இயந்திரமும் உள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரனின் முழு முயற்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த என்புமுறிவு நெரிவு சிகிச்சைப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்திரசேகரவின் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது .

தற்போது பணிப்பாளருக்காக பதில் கடமை புரியும் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ் ராஜேந்திரனிடம் அங்கு சென்று கேட்ட பொழுது -

தற்போது என்பு முறிவு நெரிவுப் பிரிவு பல நவீன உபகரணங்களுடன் அளப்பரிய சேவைகளை அங்கு செய்துவருகின்றது. எங்களுக்கு கிடைத்த ஒரு மாபெரும் சொத்து என்பு முறிவு வைத்திய நிபுணர் டாக்டர் கலாவேந்தன் அவர்கள்.

அங்கு வயது வந்தோர் முதல் சிறுபிள்ளை வரை வளை பாத கிளினிக் ஏனைய கிளினிக்குகளை சிறப்பாக நடத்தி வருகின்றார்.

அர்ப்பணிப்பு ஊழியர்களுடன் சத்திர சிகிச்சை கூடம் அங்கு தனியாக இயங்கி வருகின்றது. இதனால் அங்கு நோயாளிககளின் எண்ணிக்கை தினம் கூடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னாள் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரனின் பணி பாராட்டத்தக்கது. பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்ரசேன அதனை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்து வருகிறார். - என்றார்.

என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பத்திநாதன் கலாவேந்தன் சத்திர சிகிச்சை கூடத்தில் மிகவும் பிஸியாக இயங்கி கொண்டிருக்கும் வேளையில் சந்தித்து கேட்டபோது -

விபத்து மற்றும் அவசர பிரிவில் இருந்து இந்த எலும்புமுறிவுநெரிவுபிரிவு இயங்க ஆரம்பிக்கின்றது. இங்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் முதியோர்களுக்கான கிளினிக் நடைபெறுகிறது. அதேபோன்று வெள்ளிக்கிழமைகளில் சிறுவர் களுக்கான கிளினிக் நடைபெறுகிறது.

எமது வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் சக வைத்திய அதிகாரிகள் தாதிய உத்தியோகத்தர்கள் ஏனைய ஊழியர்கள் பலத்த ஒத்துழைப்பை வழங்கி வருவதே இன்றைய வெற்றிக்கு காரணம்.

நிர்வாகத்தோடு இணைந்து இந்த வேலைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் .பொது மக்களும் ஏனைய வைத்திய சாலைகளும் நிறைந்த ஒத்துழைப்பு தருகிறார்கள். - என்றார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கல்முனை மாநகர சபைக்கு சுவர்ணபுரவர தேசிய விருது

## பிரதமர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது





(அஸ்லம் எஸ்.மௌலானா)

மாநகரசபைகளுக்கிடையேநடத்தப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டில் கிழக்கு மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசியரீதியில்இரண்டாம்இடத்தையும் பெற்றுக்கொண்ட கல்முனை மாநகர சபைக்கு சுவர்ணபுரவர தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற சுவர்ணபுரவர தேசிய விருது விழாவின்போதே கல்முனைமாநகரசபைக்கு இவ்விருதுவழங்கப்பட்டது.

உள்ளூராட்சி,மாகாண சபைகள் இராஜங்க அமைச்சர்ஜனகவக்கும்பர, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உலக வங்கி மற்றும் ஆஷியா பவுண்டேஷன் என்பவற்றின் இலங்கைக்கானவதிவிடப் பிரிதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸிடம் இவ்விருதைப் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில்கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமானஎன். மணிவண்ணன் மற்றும்கல்முனை மாநகர சபையின் சார்பில் உதவி ஆணையாளர்ஏ.எஸ்.எம். அஸீம், சமூகஅபிவிருத்திஉத்தியோகத்தர் எம்.எம்.சாஹிர் ஆகியோரும் பங்கேற் றிருந்தனர்.

செயற்றிறன்மதிப்பீட்டில்கல்முனை மாநகர சபை மாகாண மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம்இடத்தையும்வென்று இந்த விருதை பெறுவதற்கு காரணமாக அமைந்த கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர், முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.(05)

# நீண்டகால அரசியல்வாதிகள் குடிகொண்டமையே அம்பாறை மாவட்டப் பின்னடைவுக்குக் காரணம்

## பொறியியலாளர் யு.கே.நாபீர் சாட்டை



(முஹம்மட் கான்)

அபிவிருத்தியில் அம்பாறை மாவட்டம் பின்னடைவதற்கான காரணம்நீண்டகாலஅரசியல்வாதிகள் இங்கே குடிகொண்டு தூங்கிக் கொண்டிருப்பதாகும்.

இவ்வாறு நாபீர் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகர், சமூக சேவகர், பொறியியலாளர் உதுமாங்கண்டு நாபீர் தெரிவித்தார்.

தற்போது நிதிகளை கொட்டி அடிக்கற்கள் நடப்படுகின்றமை தொடர்பாக வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடும் போது -

அம்பாறை மாவட்டம் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை பல்வேறு நிதி ஒதுக்கீட்டின் மூலம் செய்வதற்கு எத்தணித்து அடிக்கற்கள் நாட்டப்பட்டு வருகின்றது. அது அம்பாறை மாவட்டத்தையும் குடி கொண்டிருகின்றது. ஆனால் கடந்த சுமார் 20 வருட காலமாக நடப்பட்ட அடிக்கற்கள் புழுதி தோய்ந்த நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

அதற்கு மேலால் மீண்டும் அடிக்கல் நாட்டப்படுகின்றதே தவிர, மக்களின் தேவை அறிந்து சேவை செய்கின்ற அரசியல்வாதிகள் இங்கே இல்லை என்பதே உண்மையாகும்.

கடந்தகாலங்களில்வாக்களித்தமக்கள்தற்பொழுது இவர்களை துரத்தி அடிக்கின்ற எண்ணத்தில் தேர்தல் ஒன்றை எதிர்பார்த்து இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே ஏமாற்று அரசியலை செய்கின்ற கட்சிகளும்; அரசியல்வாதிகளும் வருகின்ற பொதுத் தேர்தலுடன் ஓரங்கட்டப்படுவார்கள் என்பதை களநிலவரம் எடுத்துக்கூறுகின்றது.

நாம் நாபீர் பௌண்டேசன் ஊடாக எவ்வித அதிகாரமும் இல்லாத போதும், கடந்த 35 வருட காலத்துக்கும் மேலாக, எமது சொந்த பணத்தின் ஊடாக கிழக்கு மாகாணம் பூராக மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து வருகின்றோம்.

இப்பொழுது மக்களிடம் நாம் செல்கின்ற இடமெல்லாம் அரசியல் வாதிகளில் அதிருப்தி அடைந்த நிலையில், நாபிர் பௌண்டேஷனோடு கைகோர்த்த வண்ணம் இருக்கின்றனர். எங்களை நேரடியாக அரசியலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றனர். இவர்களை அரவணைத்து அவர்களுடைய தேவைகளை இனம் கண்டு அவர்களுக்கு மேலும் உதவி செய்வதற்காக நாம் அரசியலில் குதிக்கின்றோம். வேறு எந்த தனிப்பட்ட அஜந்தாக்களும் எங்களிடம் இல்லை. மக்கள் நலன் சார்ந்த அரசியலையே நாம் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம்.

எனவேதான், எதிர் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில்மக்களின்அதிகாரத்துடன்நாம்முன்னோக்கி செல்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

(05)



## கட்டுப்பணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரும், இலங்கைதொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு எஸ்.ஜி.லியனகே என்பவரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நிலையில் நேற்று முதல் ஓகஸ்ட் 14 வரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50,000 ரூபாவும ,சுயாதீன வேட்பாளர் 75,000 ரூபாவும் கட்டுப்பணமாக செலுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## 97 சதவீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மிகுதியாக உள்ளவற்றில் முகமாலை, கிளிநொச்சி பகுதியிலே மக்கள் மீளக் குடியேற்றப்படவேண்டிய காணிகள் உள்ளன. ஏனையவை விவசாய வயல்நிலங்களாகும். எதிர்காலத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும்.

வட மாகாணத்தில் காணப்படுகின்ற வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை வடமாகாண சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு நியமிக்கும் அதிகாரத்தை அமைச்சரவை ஆளுநர்களுக்கு வழங்கியுள்ளது. எனவே அந்தத் தேவையினை நாம் அடையாளம் கண்டு, அதற்கான முறையான அதிகாரத்தைதிறைசேரியிடமிருந்து பெற்றதன் பின்னர் இத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

தற்போது தேர்தர் அறிவிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கான விசேட அனுமதியினை தேர்தல் ஆணையகத்திடம்பெற்றுக்கொண்ட பின்னரே நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அடுத்த கட்டமாக வட மாகாணத்தில் காணப்படும் வேலையற்றஇளைஞர்யுவதிகளின் பெரும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் மூன்று விசேட பொருளாதார மையங்களை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காங்கேசந்துறை, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பகுதிகளில் விசேட பொருளாதார மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதனூடாக வேலையற்றஇளைஞர்யுவதிகளுக்கு நவீன தொழிநுட்பங்களுடனான வேலைவாய்ப்புக்கள்வழங்கப்படும். எனவே, இளைஞர் யுவதிகள் அதனைப்பெற்றுக்கொள்வதற்கான தொழிநுட்பக் கல்வியையும் அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## விக்கிரமபாகுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடலுக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

1943ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி பதுளையில் பிறந்த விக்ரமபாகு கருணாரத்ன, தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகள்குறித்துஎப்போதும்ஒரே கொள்கையுடன் செயற்பட்டதோடு, அது தொடர்பான போராட்டங்களில் முன்னிலை வகித்தார்.

சிலோன் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான விக்ரமபாகு கருணாரத்ன, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றார். சுமார் 18 வருடங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் அவர் கடமையாற்றினார்.

## பதவியிலிருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்க முடியும்? ஜனாதிபதி உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளித்து அரசமைப்புக்குட்பட்டுச் செற்படவேண்டும்.

அத்துடன் உயர்நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை உத்தரவு பிரப்பிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர் சிவில் உடையில் சென்று பொலிஸை நிர்வகிக்கிறார். இது எவ்வாறு முடியும்? இது முற்றாகப் பிழையான நடவடிக்கை. அதேநேரம் பிரதமர் அரசமைப்பை மீறி செயற்படுவதையிட்டு வெட்கப்படுகிறேன்.

பொலிஸ் மா அதிபரை நியமித்த முறை அரசமைப்புக்கு முரண் என்பதாலேயே அவர் பொலிஸ் மா அதிபராகச் செயற்படுவதை உயர் நீதிமன்றம் நிறுத்தி இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் இருந்து ஜனாதிபதி தப்பிக்க முடியாது. அவர் தற்போதும்நாட்டின்ஜனாதிபதி. அவர் ஜனாதிபதி வேட்பாளர் என்பதற்காக அவரின் பொறுப்புக்களை நிறுத்த முடியாது. பொலிஸ்மாஅதிபர்ஒருவர் இல்லாதசந்தர்ப்பத்தில்பதில்பொலிஸ் மா அதிபர் ஒருவரைப் பெயரிடும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது. ஜனாதிபதிக்குப் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியாது என்றால் அவர் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்யவேண்டும். அப்போது பதில் ஜனாதிபதி அதனைச் செய்வார் என்றார்.

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சு.க.வின் தீர்மானம் குறித்து வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்குவதற்கு இதுவரையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. யாரை முன்னிலைப்படுத்துவது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது. அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்களுக்கு கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். அவர்களுடனும் ஏனைய உறுப்பினர்களுடன் பேசி தீர்மானமொன்றை எடுப்போம்.

அத்தோடு தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்துள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிப்பதாக சுதந்திர கட்சி எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நாடு மற்றும் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பொறுத்தமானதொரு தீர்மானத்தை எடுப்போம்.

விஜேதாச ராஜபக்ச ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் அல்லர். சுதந்திர கட்சியில் எவரும் தீர்மானத்தை முன்வைத்து அவரை வேட்பாளராகக் களமிறக்கவுமில்லை. வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி வெற்றி பெறக்கூடிய நிலைமையில்சுதந்திரகட்சிஇல்லை என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகத்தின் கீழ் கட்சி சுக்கு நூறாகச் சிதறியுள்ளது. இந்த கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு மேலும் 5 ஆண்டுகளாவதுபாடுபடவேண்டும். அவரும், நிமல் சிறிபா டி சில்வாவும் எடுத்த தவறான தீர்மானங்கள் கட்சியின் சீரழிவுக்கு வழி வகுத்தன. எனவே கட்சியை கட்டியெழுப்புவதற்கு பதிலாக தேர்தலில் போட்டியிட்டுஒன்றுஅல்லதுஇரண்டு இலட்சம் வாக்குகளைப் பெற நான் தயாராக இல்லை.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்குநான்தீர்மானிக்கவில்லை. தனிநபராக என்னால் அவ்வாறான தீர்மானத்தை எடுக்க முடியாது. தேர்தல் குறித்த தீர்மானம் கட்சியின் தீர்மானமாக இருக்க வேண்டும். கட்சிஎந்ததீர்மானத்தைஎடுத்தாலும் அதற்கு நான் ஆதரவளிப்பேன் என்றார்.

## பெரமுனவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான தீர்மானத்தை எடுத்தால் கட்சி பிளவடையும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்முன்னாள்ஜனாதிபதி மஹிந்தராஜபக்சமற்றும்பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்சவின் முன்னிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச தலைமையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடல் எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படாத நிலையில் பெரும் கருத்துமுரண்பாடுகளுக்குமத்தியில் நிறைவடைந்தநிலையில்பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று உறுதியாக குறிப்பிடும்பொதுஜனபெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஏற்பாடு செய்த இந்த சந்திப்பில், பொதுஜன பெரமுனவின் முன்னிணி நாடாளுமன்ற உறுப்பினர்களும், இராஜாங்க அமைச்சர்களும் கலந்துக் கொண்டுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் சட்டம் மற்றும்ஒழுங்கைநிலைநாட்டாமல் இருந்திருந்தால் இன்று தனி வேட்பாளரைக் களமிறக்க வேண்டும்என்று குறிப்பிடுபவர்கள் எவரும் வீதிக்கு இறங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் என்று சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். 2022ஆம்ஆண்டு சம்பவத்தையும் அதன் பின்னரான முன்னேற்றத்தையும் ஒரு சிலர் மறந்துவிட்டு நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களை முன்வைக்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும்தரப்பு மீண்டும்தோற்றம்பெறவேண்டும், பொதுஜனபெரமுனவின்ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுனவின் 75 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக உள்ளார்கள். அதேபோல் பொதுஜனபெரமுனவின்முன்னாள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் உறுப்பினர்களும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள் என்று சிரேஷ்ட உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பெரும்பான்மைதீர்மானத்துக்கு எதிராக கட்சி தீர்மானம் எடுத்தால் கட்சி பிளவடையும் என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை ஆணைக்குழு விடுத்ததன் பின்னர் கட்சியின் உத்தியோகபூர்வ தீர்மானத்தை அறிவிப்பதாககட்சிகுறிப்பிட்டுள்ளது. எமது கோரிக்கைக்கு கட்சி உரிய மதிப்பளிக்களிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

எதிர்பார்ப்புக்கு முரணாக கட்சி தீர்மானம் எடுத்தால் அதற்கு எதிரான தீர்மானத்தை அறிவிக்க நேரிடும் என்று இச்சந்தர்ப்பத்தின் போது பேசப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## பாதுகாப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தலை வழங்கினார். பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத்தளபதிவைஸ்அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட முப்படைகளின் உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்துடன், அரசமைப்பு மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்தார். அதேநேரம், கடந்த இரண்டு வருடங்களில் மிகவும் சிக்கலான காலப்பகுதியில் அமைச்சு என்ற ரீதியில்கடுமையானதீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்ததாகவும், அக்காலப்பகுதியில் தேசிய பாதுகாப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்திநாட்டைஸ்திரப்படுத்த முடிந்ததாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல தரப்பினருக்கும் கௌரவ ஜனாதிபதி சார்பில் நன்றி தெரிவித்த கௌரவ பிரமித்த பண்டாரதென்னக்கோன், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சகல நிறுவனங்களின் செயற்பாடுகளையும் உரிய முறையில் முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

முப்படைகளையும் மேலும் பலப்படுத்துவதுதொடர்பானவிடயங்களும், பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த விடயங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

## பொலிஸ் மா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபரின் நியமனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எந்தவொரு தவறான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அரசமைப்பிற்கமைய நியாயமான, சரியான தீர்மானத்தை ஆழமாக சிந்தித்துதான் எடுத்துள்ளோம். உங்களுக்கும் (எதிர்தரப்பினரை விழித்து) ஏனையோருக்கும் அந்த தீர்மானம் தவறாகத் தோன்றலாம். ஆனால் நாம் மனச்சாட்சிக்கமைய சரியான முறையிலேயே அந்தத் தீர்மானத்தை எடுத்தோம்.

நான் வீட்டிலிருந்து இந்த தீர்மானத்தை எடுத்தாகக் கூறியமையும் முற்றிலும் பொய்யாகும். 41(ஈ) - 5 உறுப்புரைக்கமையவே எனக்கான வாக்கினை நான் பயன் படுத்தினேன். 41 (சீ) உறுப்புரைக்கமைய அரசமைப்பு பேரவையின் அனுமதியுடனும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனும் பொலிஸ் மா அதிபர் நியமனம் நியாமானது.

எனவே இந்த பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் அதனை தீர்ப்பதற்கு படிமுறைகள் உள்ளன. அல்லது நீதிமன்றமே இதற்கான தீர்வினை வழங்கவேண்டும். ஜனாதிபதிக்குகூட இது தொடர்பில் தீர்மானிக்க முடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது என்றார்.

## மோதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று காலை நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

தேர்தல் தொடர்பிலும், பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் பல தரப்பினராலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தனது எக்ஸ் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, நாடாளுமன்றத்துக்கிடையில் மோதல்களைத்தவிர்ப்பதுமுக்கியம். சுயநலத்தைவிடநாட்டின்எதிர்காலம் முக்கியமானது எனக் கருஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

## ஓய்வூதியர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக் கொடுப்பனவு மூலம் 07 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பலன் பெறுவார்களெனவும் அமைச்சர் சுசில்பிரேமஜயந்தகுறிப்பிட்டுள்ளார்.

## சபை முதல்வர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபை முதல்வர் என்பவர் சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர். அந்தச் செயற்பாடுகளையே நான் செய்கின்றேன். அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் நான் தெளிவுபடுத்தியுள்ளேன், எனினும் அரசமைப்புப்பேரவையின்தலைவர் சபாநாயகரே.

அரசமைப்பின் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஜனாதிபதி பெயர் குறித்து அனுப்புவாரானால் அதனை உறுதிப்படுத்துவது அரசமைப்பு பேரவையே.

பொலிஸ் மா அதிபரின் சேவை தொடர்பில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானால் பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதா? அந்தப் பதவியை இடைநிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தினால் முடியும். அரசமைப்பின்126ஆவதுசரத்தின்படி அதுசரி. சட்டத்தரணிஎன்றவகையில் நானும் அதற்கு இணங்குகிறேன். பதவியைவெற்றிடமாக்காமல்பதவி நிறுத்தப்பட்டே உள்ளது. பதவி ஒன்றுவெற்றிடமாகஇல்லாவிட்டால் அதற்கான பதில் நியமனத்தை எவ்வாறு வழங்குவது?

அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுக்குச் சென்றால் அவருக்குப் பதிலாகப் பதில் அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் அரசமைப்பில் எதுவும் கிடையாது. எனினும்இந்தநியமனம் தொடர்பில் அரசமைப்பில் 7(ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இந்த நாட்டின் முக்கியமான சட்டமாகும். அதனை ஒருபோதும் மீற முடியாது என்றார்.

## செப். 21...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவினால் மற்றுமொரு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளரொருவரால் அல்லது வேட்பாளர்சார்பாகவேறொருவரால்,

(அ) அந்த வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின் 50,000ரூபாய்

(ஆ) அந்த வேட்பாளர் வேறேதேனும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது வாக்காளர் ஒருவரினால் பெயர்குறித்துநியமனம்செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின்: 75,000 ரூபாய்

தேர்தல் ஆணைக்குழுவிடம் அல்லது குறித்த கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எவரேனுமொருவரிடம் அல்லது இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ளதேர்தல்ஆணைக்குழு அலுவலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிடப்பட வேண்டுமென குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது

ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்ட நாளான 2024.07.26 ஆம் திகதிக்கும் பெயர் குறித்தநியமனநாளான 2024.08.15 ஆந் திகதிக்கு முன்னைய நாளான 2024.08.14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கும் முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியினுள் அலுவலக நாட்களில் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்கள் தவிர்ந்த) ஏனைய நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரையும், 2024.08.14 அன்று மாத்திரம் மு.ப. 8.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரையும் இவ்வைப்புப் பணத்தை செலுத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களை பெயர் குறித்து நியமிக்கும் வேட்புமனு தாக்கல் இடம்பெறும் திகதி ஓகஸ்ட் 15 வியாழக்கிழமை என அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## கனடாவிலிருந்து வந்த தம்பதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதியில்கனேடியதமிழ்குடும்பம் மீது தாக்குதலை மேற்கொண்டு கொள்ளையடித்தசம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனலைதீவை சேர்ந்த தமிழ் குடும்பம் ஒன்று, கனடாவில் குடியுரிமை பெற்று வந்து அங்கு வசித்து வந்த நிலையில், விடுமுறையை கழிக்க அனலைதீவுக்கு கடந்த வருடம்வந்துதங்கியிருந்துள்ளனர்.

அந்நிலையில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் அவர்கள் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு, அவர்களிடம் இருந்த வெளிநாட்டு பணம், நகைகள், பொருட்கள், கடவுசீட்டு உள்ளிட்டவற்றை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்துறை பொலிஸார், யாழ்ப்பாணத்தில் இருந்து, பிரத்தியோக படகில் அனலைதீவுக்கு சென்று தாக்குலை மேற்கொண்டு, கொள்ளையடித்துக்கொண்டுமீள படகில் ஏறி தப்பி சென்றமையை கண்டறிந்தனர்.

அதனை தொடர்ந்து மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில் 03 நபர்களை சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, தமக்கு பெண்மணி ஒருவர் பணம் கொடுத்து தம்மை கூலிக்கு அமர்த்தி தாக்குதலை மேற்கொள்ள கோரியதன் அடிப்படையிலையே தாம் தாக்குதல் மேற்கொண்டு கொள்ளையடித்ததாக தெரிவித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் குறித்த பெண்மணியை சுமார் ஒன்றரை வருடங்களாக தேடி வந்த பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை பெண்மணியை கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்மணியிடம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, கனடாவில் உள்ள ஐயப்பன் கோவில் தலைவரே தனக்கு பணம் அனுப்பி தாக்குதல் மேற்கொள்ள கூறியதன் அடிப்படையிலையே தான் வன்முறை கும்பல் ஒன்றுக்கு பணம் கொடுத்து தாக்குதலை மேற்கொண்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதனை தொடர்ந்து குறித்த பெண்ணை வியாழக்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார், பெண்ணை பொலிஸ்காவலில்தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றமன்று, பெண்ணை 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதித்துள்ளது.

அதேவேளை குறித்த பெண் கிளிநொச்சியை சேர்ந்தவர் எனவும், அவருக்கு எதிராக ஏற்கனவே கொலை வழக்கொன்றும், சில மோசடி வழக்குகளும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)




# ஓரினச்சேர்க்கை சட்டமூலத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



தேசியஒற்றுமைக்கானசர்வமதகூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் பொரளையில் அமைந்துள்ள பிசப் தலைமை காரியாலயத்தில் வணக்கத்திற்குரிய களனி வஜ்ர தேரர் அவர்களின் தலைமையில் ஓரினச் சேர்க்கை சட்டவாக்கத்திற்கு கண்டனத்தை தெரிவித்திருந்தனர்.

இதன் போது கார்டினல் ரஞ்சித் மல்கம் மற்றும்வணக்கத்திற்குரிய சோம ரத்தின தேரர், வணக்கத்துக்குரிய ஜீனானந்ததேரர்,கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா ,கலாநிதி அல் செய்க் ஹசன் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் சமூக சீரழிவுக்குவழிவகுக்கும் ஒழுக்க கேடான ஓரினச் சேர்க்கை சட்டங்கள் நாகரீக சமூகத்தை அழிக்கின்றது என்ற வகையில் ஜனாதிபதி இச்சட்டவாக்கத்தை அமுல்படுத்தக் கூடாது என்றும் இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(05)

# காரைதீவு - மண்டூர் தலபாதயாத்திரை

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும்





மண்டூர் ஸ்ரீமுருகன் ஆலயத்துக்கான வருடாந்த தலபாதயாத்திரை எதிர்வரும் ஓகஸ்ட்மாதம்17ஆம்திகதிசனிக்கிழமை காரைதீவிலிருந்துநடைபெறஇருக்கிறது

வரலாற்று பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி 19 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய விருக்கிறது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை இடம் பெறுவது வழக்கம்.

காரைதீவுஇந்துசமயவிருத்திச்சங்கம் ஏனையஅமைப்புகளுடன்இணைந்து இந்தபாரியபாதயாத்திரையைவருடாந் தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்படும் பாதயாத்திரை கல்முனை நற்பிட்டிமுனை சேனைக் குடியிருப்பு கிட்டங்கி நாவிதன்வெளி வேப்பையடி தம்பலவத்தை ஊடாக மண்டூரைச் சென்றடையும்.

தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித்தின் அன்னதான நிகழ்வு இம் முறையும் இடம்பெறும் என சங்க செயலாளர் கு. ஜெயராஜி தெரிவித்தார். (05)

# வீரசிங்க எம்.பியின் நிதி உதவியில் திருக்கோவிலில் 24 செயற்றிட்டங்கள்

## கிழக்கு ஆளுநர் செந்தில் பங்கேற்பு







(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ .டி.வீரசிங்கவின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் 24 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

அதற்கான பொருள்கள் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் விஷேட அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நாடாளுமன்ற உறுப்பினர் டி. வீரசிங்கவின் அழைப்பின் பெயரில் வருகைதந்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்வீரசிங்க திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ்.நிருபா பிரதேசசெயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உசாந்த் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யோகராஜா சந்துரு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் மற்றும் ஆளுநரின் இணைப்பாளர்கள் கலந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். (05)



# ஸ்வர்ணபுரவர தேசிய விருதில் வட மாகாணத்துக்கு முதலிடம்

## வவுனியா நகரசபை 2 ஆம் இடம்





ஸ்வர்ணபுரவர தேசிய விருது வழங்கும் நிகழ்வில் 20 விருதுகளைப் பெற்று வடக்கு மாகாணம் முதலாமிடம் பெற்றுள்ளதுடன், அதில் வவுனியா நகரசபை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறனை மதிப்பிடுவதற்கான ஸ்வர்ணபுரவர தேசிய விருது வழங்கும் விழாவில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் ஸ்வர்ணபுரவர தேசிய விருது வழங்கி வைக்கப்பட்டது.

நாடு முழுவதுமுள்ள 276 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டம் கட்டமாக நடத்தப்பட்ட சபைகளின் செயற்றிறன் மதிப்பீட்டின் அடிப்படையில் 62 விருதுகளில் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் 20 விருதுகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுள்ளன. வல்வெட்டித்துறை நகரசபை முதலாமிடத்தைப் பெற்று தங்க கேடயத்தையும் பெற்றுக் கொண்டது.

இதன்போது வவுனியா மாவட்டம் 9 விருதுகளைப் பெற்றுக் கொண்டது. அதில் வவுனியா நகரசபை வெள்ளிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டதுடன், 5 சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டன. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வெண்கல கேடயத்தைப் பெற்றதுடன், 2 சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டது. (05 - 100)

# யாழில் வாள் முனையில் மோ.சைக்கிள் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் வாள் முனையில் மோட்டார் சைக்கிளில் வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் வீதியில் இளைஞன் ஒருவர் புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக காலை நொண்டியவாறு இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளை வழி மறித்துள்ளார்.

அதனால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் மோட்டார் சைக்கிளை நிறுத்திய வேளை, நொண்டிக் கொண்டிருந்த நபர் தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த வாளினை எடுத்து மோட்டார் சைக்கிள் ஓட்டுனரை வெட்ட முயன்றுள்ளார்.

அதற்கு இளைஞன் எதிர்ப்பு காண்பிக்க, வீதியின் ஓரத்தில் மறைந்திருந்த மற்றுமொரு இளைஞனும் வாளுடன் வெளியே வந்து இளைஞனை வெட்ட முயன்ற வேளை இளைஞன் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளார்.

அதனை அடுத்து மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்ட தாக்குதலாளிகள் இருவரும் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கனேடிய பிரதமரின் 'இனப்படுகொலை' குற்றச்சாட்டை நிராகரித்தது இலங்கை

கனேடியபிரதமர்ஜஸ்டின்ட்ரூடோவினால்முன்வைக்கப்பட்ட 'இனப்படுகொலை' குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்திருக்கும் வெளிவிவகார அமைச்சு, கனடாவில் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்படும் இக்குற்றச்சாட்டு இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான அமைதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கு ஒருபோதும் உதவாது எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட 'கறுப்பு ஜுலை' கலவரங்கள் அரங்கேறி கடந்த செவ்வாய்க்கிழமையுடன் 41 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஒரு வாரத்துக்கும் மேல் நீடித்த இக்கலவரங்களின் மிக மோசமான தாக்கத்தையும், அதனால் பாதிக்கப்பட்டவர்களையும் நினைவுகூர்ந்து கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

அவ்வறிக்கையில் 'இற்றைக்கு 41 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் மக்களையும், அவர்களின் வர்த்தக நிலையங்களையும் இலக்குவைத்து வன்முறைத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் பலியானதுடன், பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் காயமடைந்தனர். அத்தோடு பலர் பாலியல் வன்முறைகளுக்கு இலக்கானதுடன், நாட்டை விட்டு வெளியேறவேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகினர்.

'கறுப்பு ஜுலை' என அறியப்படும் தமிழர்களுக்கு எதிரான கலவரம் நாட்டின் அமைதியின்மையை தோற்றுவித்ததுடன், பல தசாப்தகால போருக்கும் வழிவகுத்தது. இது இலங்கையின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகும்' என கனேடியப் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறான மிக மோசமான வன்முறைகளால்பாதிக்கப்பட்டமற்றும்தப்பிப்பிழைத்தவர்களை நினைவுகூருவதில் கனேடியத் தமிழர்கள் மற்றும் உலகவாழ் தமிழர்களுடன் தாம் உடன்நிற்பதை வெளிக்காட்டும்வகையில் கடந்த 2022ஆம் ஆண்டு மே 18ஆம் திகதியை 'தமிழினப் படுகொலை நினைவு நாளாக' பிரகடனப்படுத்துவதற்கான தீர்மானம் கனேடியப் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் வருடாந்தம் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்றும், ஜுலை மாதம் 23ஆம் திகதி கறுப்பு ஜுலை கலவரத்தை நினைவுகூரும் தினத்தன்றும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவினால் வெளியிடப்படும் அறிக்கைகளில் பயன்படுத்தப்படும் 'இனப்படுகொலை' என்ற சொற்பதத்தை நிராகரித்து மறுப்பு அறிக்கை வெளியிட்டுவரும் வெளிவிவகார அமைச்சு, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை எனவும் கூறிவருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இம்முறையும் அத்தகையதொரு மறுப்பு அறிக்கையை வெளியிட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சு, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவினால் கடந்த 23ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை முற்றாக நிராகரிப்பதாக அதில் தெரிவித்திருக்கிறது.

அத்தோடு இவ்விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடு குறித்து இதற்கு முன்னரும் கனேடிய பிரதமருக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் 'கனடாவில் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்படும் இக்குற்றச்சாட்டு இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான அமைதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்காது' எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(05)

## அல் – முனீரா பெண்கள் உயர்தர பாடசாலை கட்டட நிர்மாணப் பணிக்கு நிதி ஒதுக்கீடு





முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக நாடாளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் பயனாக அக்கரைப்பற்று கல்வி வலய அட்டாளைச்சேனை கமு/அக்/ அல்-முனீரா பெண்கள் உயர்தர பாடசாலைக்கு கட்டட நிர்மாணப்பணிக்கு வியாழக்கிழமை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணம் கையளிக்கப்பட்டது.

கமு/அக்/ அல்- முனீரா பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் ஏ.சி. நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை நிர்வாகத்திடம் கையளித்ததுடன் வேலைகளையும் ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் களான அதிபர் எம்.ஜெ. அன்வர் நௌஷாத், விரிவுரையாளர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

## வெளிநாட்டுச் சிகரெட்டுக்களுடன் விமான நிலையத்தில் இருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 45 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில், விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 41,400 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரொருவர் என்பதுடன், இவர் தனது உறவினரொருவரை சந்திப்பதற்காகத் துபாய்க்குச் சென்று மீண்டும் நாடு திரும்பும் போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய சந்தேக நபர், கொழும்பு தலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவர் என்பதுடன், இவர் துபாய்க்குச் சென்று மீண்டும் நாடு திரும்பும் போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கும் எச்சரிக்கை விடுத்து அவர்களை விடுதலை செய்துள்ளனர். (05)

## பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக ருவன் குணசேகர நியமனம் பெற்றார்



பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருவன் குணசேகர நியமிக்கப்பட்டு ள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு சென்றுள்ளதால் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ நாடு திரும்பியதையடுத்து பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் கடமையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## நீதிமன்ற உத்தரவை ஆளும்தரப்பு ஏற்கமறுப்பது ஆபத்து, அச்சுறுத்தல்

### அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு



பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தின் உத்தரவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுப்பது ஆபத்தானவிடயம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

இது அச்சுறுத்தலான ஆபத்தான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்கமறுப்பதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் அரசாங்கம் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது என அம்பிகா சற்குணநாதன் சமூக ஊடகபதிவில் தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் சித்திரவதையில் ஈடுபட்டார் என உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியதால் அவரை பொலிஸ்மா அதிபராக நியமித்திருக்கக்கூடாது என தெரிவித்துள்ள அவர் அரசாங்கம் நீதிமன்றத்தை புறக்கணித்து அவரை நியமித்தது, பொதுச்சேவையை அரசியல்மயப்படுத்தியது என அவர் தெரிவித்துள்ளார். (05)

## காரை நிறுத்திக் கொள்ளை பொலிஸ் சார்ஜென்ட் கைது

நீர்கொழும்பு பகுதியில் பயணித்த காரொன்றை நிறுத்தி 2 லட்சம் ரூபா பணம் மற்றும் வாகனப் பதிவுப் புத்தகம் ஆகியவற்றை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவில் பணிபுரியும் பொலிஸ் சார்ஜென்ட் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வேயங்கொடை பகுதியில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொள்ளை சம்பவம் நீர்கொழும்பு - கொழும்பு வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# காரைதீவில் ஒன்றுகூடல்



(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாத அமைப்பாக புலிகள் முத்திரை குத்தப்பட்டு, போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட காரணம் சம்பந்தர் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பே என்று தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொது செயலாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட மாநாடு எதிர்வரும் 04 ஆம் திகதி மாலை காரைதீவில் இடம்பெற உள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் காரைதீவு, நாவிதன்வெளி, சம்மாந்துறை உள்ளிட்ட பிரதேசங்களில் ஆதரவாளர்களுடனான சந்திப்புகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

காரைதீவில் ஆதரவாளர்களை சந்தித்து பேசியபோது பிரசாந்தன் தெரிவித்தவை வருமாறு -

அதற்கான எழுச்சி காரைதீவு பிரதேசத்தில் இருந்து தோற்றம் பெற வேண்டும்.ஏனென்றால் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதேசங்களின் மகுடமாக காரைதீவு விளங்குகின்றது. காரைதீவில் தோற்றம் பெறுகின்ற எழுச்சி அம்பாறை மாவட்டம் முழுவதும் பேரெழுச்சியாக பரிணமிக்கும் என்பது திண்ணம்.

ஆகவேதான் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட மாநாட்டை காரைதீவில்தான் நடத்த வேண்டும் என்பதில் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பற்றுறுதியாக உள்ளார். அம்பாறை மாவட்டத்துக்கான எமது கட்சி அலுவலகம் காரைதீவில் அமைக்கப்படும்.மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமான வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அது போல ஏராளமான வேலை திட்டங்கள் எம்மால் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும். தலைவர் பிள்ளையானை 05 வருடங்கள் சிறையில் அடைத்தார்கள். தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் கதை முடிந்து விடும் என்று தப்பு கணக்கு போட்டார்கள்.



புலிகள் இயக்கம் இராணுவரீதியாக வெற்றிகளை பெற்றிருந்த நிலையில், புலிகள் இயக்கத்தை அரசியல்மயப்படுத்துகின்ற பொறுப்பு சம்பந்தன் ஐயா தலைமையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.அவர்கள் அந்த பொறுப்பை சரியாக செய்தார்களா? புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தப்பட்டு முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட காரணம் சம்பந்தன் ஐயா தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பே ஆகும்.

காலம் காலமாக தமிழ் மக்கள் தேர்தல்களில் தவறாமல் வாக்களித்து வருகின்றனர். ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று வந்திருக்கின்ற தலைவர்கள் ஒழுங்காக பொறுப்புகளை செய்யவே இல்லை. இதற்கு மிக நல்ல உதாரணம் அம்பாறை மாவட்டம் ஆகும்.அதே நேரத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இழக்கப்பட கூடாது என்பதால் கடந்த பொது தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி இங்கு போட்டியிடவில்லை. அதனால்தான் மிக மிக சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தேசிய பட்டியல் ஆசனத்தை தவற விட்டோம்.

அடுத்த பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி நிச்சயம் போட்டியிடும். அம்பாறை மாவட்டத்தில் இருந்தே வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என்பதுடன் வெளியில் இருந்து வேட்பாளர்கள் இறக்குமதி செய்யப்படவே மாட்டார்கள்.மாவை சேனாதிராசா இங்கு வந்து போட்டியிட்டு விட்டு சென்றார். அம்பாறை மாவட்டத்துக்கு வந்து வாக்குகளை பெற்று விட்டு சென்றவர்களை தேடிதான் கண்டுபிடிக்க வேண்டி உள்ளது. அடுத்த தேர்தலில் மட்டக்களப்புமாவட்டத்தில் குறைந்தது இரு ஆசனங்கள் எமக்கு கிடைக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இன்னொரு ஆசனம் தமிழ் மக்கள் விடுதலை கட்சிக்கு கிடைக்கின்றபோது அது அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கான விடிவெள்ளியாக அமையும்.

ஆனால் அது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி போராளிகளுக்கு புதிய உத்வேகத்தை கொடுத்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு இளைஞர், யுவதியும் பிள்ளையானாக மாறினார்கள். சிறையில் இருந்துகொண்டே மிகமிக அதிகபடியான வாக்குகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பெற்று பாராளுமன்றம் சென்ற வரலாற்று சாதனையை தலைவர் பிள்ளையான் நிலைநாட்டினார்.கருத்துகளை கருத்துகளால் வெல்ல வேண்டுமே ஒழிய கருவிகளால் அல்ல என்கிற தாரக மந்திரத்துடன் ஆரம்பிக்கப்பட்டதே தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி. எமது மக்களை கரை சேர்க்க வல்ல தலைமை மாலுமியாக தலைவர் சந்திரகாந்தன் விளங்குகின்றார். சமூகத்தை நேசிக்கின்ற, சுயநலம் இல்லாமல் தியாக சிந்தனையோடு செயற்படுகின்ற எவரும் மக்கள் தலைவராகலாம் என்பதற்கு அவரே முன்னுதாரணம்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியில் யாரும் பாரம்பரிய அரசியல் பின்னணியில் இருந்து வந்தவர்கள் அல்லர். போராட்ட வடிவத்தை மாற்றி, வசைகளை, பழிகளையும் ஏற்று கொண்டு, அரசியல் கட்சியாக வடிவம் எடுத்து எமது மக்களின் இன்னல்களை துடைத்து கொண்டிருக்கின்றோம். வரலாறு எம்மை விடுவித்திருக்கிறது.கோட், சூட் போட்டவர்கள்தான் அரசியல் செய்ய முடியும் என்கிற மாயையை உடைத்தவர் தலைவர் பிள்ளையான். கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்றபோது அவருக்கு வயது 34. அவர் எந்தவிதமான ஊழல் குற்றச்சாட்டும் இல்லாத தலைவர்.

பாட்டாளிகளும் அரசியல் செய்யலாம் என்பதையும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிகள் நிரூபித்திருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆயிரம் ஆயிரம் பிள்ளையானகள் தோற்றம் பெற வேண்டும். அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அடிமை விலங்குகள் ஒடிக்கப்பட வேண்டும். அபிவிருத்திகள் நிலைநாட்டப்பட வேண்டும். - என்றார். (05)

# தேசிய மட்ட விளையாட்டில் வவுனியா இளைஞன் சாதனை



தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் வடமாகாணத்தை பிரிநிதித்துவப்படுத்தி வவுனியா வடக்கு



இளைஞன் தங்கப்பதக்கம் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

48ஆவது தேசியமட்ட விளையாட்டு போட்டி கொழும்பில் இடம்பெற்றது.

இதில் குத்துச்சண்டை போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதிப்படுத்தி முதன்முறையாக தங்கப்பதக்கத்தை பெற்று வவுனியா நெடுங்கேணியை சேர்ந்த முத்தையா கிரிதரன் என்ற இளைஞன் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

குறித்த குத்துச்சண்டை போட்டி யானது கொழும்பு றொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றிருந்தது. இதில் 63.5 தொடக்கம் 67 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்டே குறித்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதேவேளை வடமாகாண தலைமை பயிறுவிப்பாளர் மு.நிக்சன் ரூபராஜ் தலைமையிலான அணியினர் ஒரு தங்கம், 02 வெள்ளி 05 வெண் கலப்பதக்கத்தையும் பெற்றுக் கெண்டனர்.

இதில் குறித்த பயிற்றுவிப்பாளரின் பயிற்சியின் கீழான வவுனியா மாவட்ட குத்துச்சண்டை அணியினர் 01 தங்கம் மற்றும் 03 வெண்கலப்பதக்கத்தினை பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05-100)

# கிளிநொச்சியில் திட்ட மீளாய்வு கூட்டம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குறித்த கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று



9.30 மணிக்கு ஆரம்பமானது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் தடையாக இருக்காது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,



குறித்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர், அரசாங்க வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது, வேட்பாளர்களுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராக அவை பயன்படுத்தப்படுமாயின், தேர்தல்கள் ஆணைக்குழு தமது கரிசனையை வெளிப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்ச மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தியே இதனை தெரிவித்த அமைச்சர், கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரைராடினார். (05 - 113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2024இல் வெளியிடப்பெற்றது